கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையியில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

2025ம் வருடம் ஜூலை மாதம் 24ம் தேதி வியாழக்கிழமை
இடைநிலை மனு எண்.2/2025
இன்
அசல் வழக்கு எண்.105/2016
-----

1. பாண்டியம்மாள்
2. ஜெயபாண்டி
3. சௌந்திரபாண்டி

... மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

/ எதிர்/

1. ராஜாராம்
2. செல்வராஜ்
3. அர்ச்சுனன்
4. அலமேலு

... எதிர்மனுதாரர்கள்/ வாதிகள்

இம்மனுவில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.பொன்னம்பலம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/ வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.தனபாண்டியன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளித்தும், மனு,

எதிருரை மற்றும் சாட்சிய சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## உத்தரவு

இம்மனுவானது உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் பிரிவு 151–ன் கீழ் மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை** :–

இந்த மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

மனுதாரர்கள் அவர்களது மனுவில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1ன் மூலம் தாக்கல் செய்திருந்த முதல் விசாரணை மற்றும் பகுதி குறுக்கு விசாரணையை ரத்து செய்துவிட்டு 3–ம் பிரதிவாதியை பிரதிவாதி தரப்பு சாட்சியாக விசாரணை செய்ய அனுமதிக்க உத்தரவிடவேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்திருந்த எதிருரையில் இம்மனுவை அனுமதிக்க கூடாது என்று ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது.

**3) தீர்வு:–**

3.1) இருதரப்பும் போதிய வாய்ப்பளிக்கப்பட்டது. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்களோ, ஆவண சாட்சியங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை. அசல் வழக்கானது தாவா சொத்துக்கள் எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யக்கோரியும், அதன் தொடர்ச்சியாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், 1ம் பிரதிவாதிக்கும், 2ம் பிரதிவாதிக்கும் எழுதி வைத்த தான செட்டில்மெண்ட் ஆவணங்கள் சட்டப்படி செல்லாது என விளம்புகை செய்ய கோரியும் வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.2) அசல் வழக்கில் பி.வா.சா.1 பாண்டியம்மாள் என்பவர் 20.10.2023ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு, அவர் 24.10.2024ம் தேதி வாதிகள் தரப்பில் பகுதியாக குறுக்குவிசாரணை செய்யப்பட்டுள்ளார். மேற்படி, பி.வா.சா.1 பாண்டியம்மாள் என்பவர் 7 வருடங்களுக்கு முன்பாக தொண்டை பகுதியில் அறுவை சிகிச்சை

செய்திருந்தார் என்றும், அதனால் அவரால் அதிகமாக சத்தமிட்டு பேச முடியாத நிலையில் இருந்து வருகிறார் என்றும், அதனால் அவரால் நீதிமன்றத்தில் ஆஜராகி குறுக்கு விசாரணை செய்ய ஒத்துழைக்காத சூழ்நிலையில் உள்ளார் என்றும், எனவே, அவர் அளித்த முதல் விசாரணை மற்றும் பகுதி குறுக்கு விசாரணையை ரத்து செய்துவிட்டு, பி.வா.சா.3ஐ பிரதிவாதி தரப்பு சாட்சியாக விசாரிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.3) மேற்படி பி.வா.சா.1 ஆனவர் முதல் விசாரணை செய்யப்பட்டு, குறுக்குவிசாரணை செய்யப்பட்ட நிலையில், அவரது சாட்சியத்தை பொறுத்து வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வேண்டிய நிலையில், 7 வருடங்களுக்கு முன்பாக நடைபெற்ற அறுவை சிகிச்சையால், அவரால் அதிகமாக சத்தமிட்டு பேச முடியாத நிலை உள்ளது என்று மனுவில் குறிப்பிட்டுள்ளது போலும், அதனை நிரூபணம் செய்யும்விதமாக மனுதாரர் தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

3.4) மேலும், மேற்படி சாட்சி விசாரணையை நீக்கரவு செய்தால், வழக்கு விசாரணையில் பாதிப்பு ஏற்படும் என்பதை கருத்தில் கொண்டும், பி.வா.சா.1 தொண்டையில் அறுவை சிகிச்சை

செய்துள்ளார் என்பதை நிரூபிக்கும்பொருட்டு எந்த ஒரு மருத்துவ குறிப்போ, மருத்துவ சான்றிதழோ இந்நீதிமன்றத்தில் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்பதை கருத்தில் கொண்டும், பி.வா.சா.1 சத்தமிட்டு பேச முடியாத நிலையில் உள்ளதால் அவரது சாட்சியத்தை குறுக்கு விசாரணை செய்ய இயலாது என்பது சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை என்பதை கருத்தில் கொண்டும், மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுகிறது.

**முடிவாக,** இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 24.07.2025ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.07.24 17:57:32 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

**இணைப்பு:–**

1. **மனுதாரர்கள் தரப்பு சாட்சி** : இல்லை
2. **மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை
3. **எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி** : இல்லை
4. **எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.07.24 17:57:42 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.2/2025
அசல் வழக்கு எண்.105/2016
வரைவு/செவ்வை உத்தரவு
நாள் : 24.07.2025